**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 16.11.11 | 1. தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெற்று முடிந்த உள்ளாட்சி தேர்தலை தொடர்ந்து அரசாணை எண் 169 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 04.11.2011ல் 1981ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) பிரிவு 6ன் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 2008ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) பிரிவு எண் 8 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 25/1981ன் பிரிவு 6ன் (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக கீழ்க்கண்டவாறு 6 நிலைக்குழுக்களை உருவாக்கி உத்திரவிடப்பட்டுள்ளது.<br><br>1) கணக்கு நிலைக்குழு<br>2) கல்வி நிலைக்குழு<br>3) பொது சுகாதார நிலைக்குழு<br>4) வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு<br>5) நகரமைப்பு நிலைக்குழு மற்றும்<br>6) பணிகள் நிலைக்குழு<br><br>மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>எப்1/21218/05 | 470) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 2. | அரசாணை எண் 169 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 04.11.2011ல் தூத்துக்குடி மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட நிலைக்குழுக்கள் அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br><br>1) கணக்கு நிலைக்குழு<br>2) கல்வி நிலைக்குழு<br>3) பொது சுகாதார நிலைக்குழு<br>4) வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு<br>5) நகரமைப்பு நிலைக்குழு மற்றும்<br>6) பணிகள் நிலைக்குழு<br><br>தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையரக செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் M.E1/9164/2011 நாள் 09.11.2011ல் மேற்படி குழுக்களை குறைந்தபட்சம் 6 முதல் 15 வரையிலான உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்றும், மேலும் ஒவ்வொரு குழுவிற்கும் நிர்ணயம் செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு மகளிர்க்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி ஆறு நிலைக்குழுக்களுக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் மகளிர்க்கான ஒதுக்கீடு நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br><br>1) புதிதாக தோற்றுவிக்கப்படும் ஆறு நிலைக்குழுக்களுக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாமன்றம் நிர்ணயிக்கலாம்.<br>2) மகளிர்க்கான ஒதுக்கீட்டை நிர்ணயிக்கலாம்.<br><br>எப்1/21218/2005 | 471) 1) 6 (ஆறு) நிலைக்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.<br>2) மகளிருக்கான ஒதுக்கீடு 2 (இரண்டு) உறுப்பினர்கள் நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. |
| | 3. | தூத்துக்குடி மாநகராட்சி 25.11.2011 முதல் சங்கரப்பேரி, மீளவிட்டான், அத்திமரப்பட்டி, முத்தையாபுரம் மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 பஞ்சாயத்துக்களை இணைத்து மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் இருந்து பம்பிங் செய்யப்படும் குடிநீர், மாநகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு பகுதிகளான 40 வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய போதுமானதாக இருந்து வருகிறது.<br><br>மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 5 பஞ்சாயத்துகளுக்கும் தற்போது மாநகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் மேற்படி 5 பஞ்சாயத்துக்களுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்த சுமார் ரூ.190.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. எனவே தற்சமயம் மேற்படி பஞ்சாயத்துகளில் உள்ள பொது மக்களின் குடிநீர் தேவையின் அவசியத்தை முன்னிட்டு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அத்தியாவசியமாகிறது.<br><br>எனவே மேற்கண்ட பஞ்சாயத்துக்களில் உள்ள பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டு புதியதாக 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டேங்கர் | 472) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | லாரிகள் 5 எண்ணம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று வாங்கிடவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.85.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/14201/2011 | |
| | 4. | இம்மாநகராட்சிப் பகுதியில் இருந்து சுமார் 40 கி.மீட்டர் தூரத்தில் உள்ள தூத்துக்குடி–திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள முறப்பநாடு அருகில் வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப் படுகையில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 6 குடிநீர் வடிகட்டும் கிணறுகளும், 3 நீர் சேகரிக்கும் கிணறும், புதிதாக 3 இலட்சம் கொள்ளளவுள்ள நீர் சேகரிக்கும் தொட்டியும் அமைக்கப்பட்டு 170 எச்.பி. திறனுள்ள இரண்டு மோட்டார், 40 எச்.பி. திறனுள்ள ஒரு மோட்டார், 35 எச்.பி. திறனுள்ள ஒரு மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு தினமும் சுமார் 250 இலட்சம் லிட்டர் குடிநீர் 700 எம்.எம் (9எஸ்சி) பிரதான குழாய் மூலம் 6520 மீட்டர் தூரத்தில் உள்ள வல்லநாடு மலைப்பகுதியில் உள்ள 17.025 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தெப்பத்தில் குடிநீர் சேகரிக்கப்படுவதுடன், நேரடியாகவும் குடிநீர் 600 எம்.எம் ஆர்.சி.சி(9பிஎஸ்சி ஏசி) குழாய்கள் மூலம் இரு தன்னோட்ட குழாய்களாக 2820 மீட்டர் தூரத்தில் உள்ள மாநகராட்சி பகுதியில் உள்ள ராஜாஜி பார்க் நீர்த்தேக்க தொட்டியில் வந்தடைகிறது.<br><br>மேற்படி குடிநீர் மெயின் குழாயில் அடிக்கடி ஏற்படும் குழாய் உடைப்பு மற்றும் கசிவுகள் ஆகியவற்றை கண்காணித்து பராமரிக்க மாநகராட்சியில் தகுந்த லைன்மேன் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், குடிநீர் பணியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு வல்லநாட்டில் இருந்து ராஜாஜி பார்க் வரை உள்ள குடிநீர் மெயின் குழாயினை, அவுட் சோர்ஸிங் முறையில் தொழிற்கல்வி பயின்ற தகுதி வாய்ந்த பொருத்துநர் 2 நபர்கள் மற்றும் உதவியாளர்கள் 8 நபர்கள் கொண்டு ஒரு வருட ஒப்பந்த முறையில் பராமரிப்பு பணி மற்றும் குழாய் உடைப்பு சரி செய்யவும் மேற்படி விபரங்கள் குறித்து உடனுக்குடன் மாநகராட்சி அலுவலகத்தில் தகவல் தெரிவிப்பதற்கும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>வல்லநாட்டில் இருந்து ராஜாஜி பார்க் வரை உள்ள குடிநீர் மெயின் குழாயினை அவுட் சோர்ஸிங் முறையில் தொழிற்கல்வி பயின்ற தகுதி வாய்ந்த பொருத்துநர் 2 நபர்கள் மற்றும் உதவியாளர்கள் 8 நபர்கள் கொண்டு ஒரு வருட ஒப்பந்த முறையில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் குழாய் உடைப்பு சரிசெய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் ரூ.6.00 லட்சம் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/14200/2011 | 473) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 5. | இம்மாநகராட்சிப் பகுதிக்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு ராஜாஜி பார்க் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் குறைந்த தாழ்வழுத்த மின் இயக்கி மூலம் மின்மோட்டார் இயக்கி கலைஞர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் விவிடி பார்க் மேல்நிலை | 474) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றின் மூலம் மாநகரின் வடபகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் ராஜாஜி பார்க் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் உள்ள மின்மோட்டார் மின்சார தடை நேரத்தில் இயக்க இயலாத நிலை இருந்து வருகிறது. இதனால் வடபகுதியில் உள்ள வார்டு பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது.<br><br>எனவே மேற்படி மின்சாரம் தடை நேரத்தில் தடையின்றி குறைந்த தாழ்வழுத்த மின்மோட்டார் இயக்கி சீரான குடிநீா விநியோகம் செய்ய ஏதுவாக 200 கிலோ வாட் திறனுள்ள ஜெனரேட்டர் புதிதாக வாங்கி பொருத்திடவும், அது தொடர்பான வயரிங் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்திற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/14199/2011 | |
| | 6. | இம்மாநகராட்சிப் பகுதியில் இருந்து சுமார் 40 கி.மீட்டர் தூரத்தில் உள்ள தூத்துக்குடி–திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள முறப்பநாடு அருகில் வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப் படுகையில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் வடிகட்டும் கிணறுகளில் இருந்து சப்மெர்சிபிள் மோட்டார் மூலமும் 170 எச்.பி. திறனுள்ள இரண்டு மோட்டார், 40 எச்.பி. திறனுள்ள ஒரு மோட்டார், 35 எச்.பி. திறனுள்ள ஒரு மோட்டார் மூலம் செக்ஷன் கிணறுகளிலிருந்தும் 40 எச்.பி. திறனுள்ள ஒரு மோட்டார் மூலம் குடிநீர் சேகரிக்கும் தொட்டியிலிருந்தும் மின் மோட்டார்கள் மூலம் முறையே நாளொன்றுக்கு 12 மணி நேரம் இயக்கப்பட்டு குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு வருகிறது.<br><br>மேற்படி மின் மோட்டார்கள் அனைத்தும் 2000 ஆண்டிலிருந்து இயக்கப்பட்டு வருகிறது. சுமார் 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் உந்துதல் சக்தி குறைந்து, குறைந்த அளவு குடிநீர் பம்பிங் செய்யப்படுவதால் மின் உபயோக திறன் அளவு கூடுதலாக வருகிறது. எனவே மேற்படி மின்மோட்டார்கள் உந்து சக்தி குறித்து தொழில்நுட்ப வல்லுநர்களால் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. (Energy and Efficiency audit)<br><br>எனவே தொழில்நுட்ப வல்லுநர்குழுவின் மூலம் மேற்கண்ட மின் மோட்டார்கள் உந்து திறன் குறித்து ஆய்வுபணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/14250/2011 | 475) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 7. | இம்மாநகரின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் ஒரே குடிநீர் ஆதாரமான, இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடம் 1வது பழைய பைப்லைன் திட்டத்தில் 175 குதிரை வேக மின் மோட்டார் இரண்டு எண்ணம் பொருத்தப்பட்டுள்ளது. மின்சாரத் தடை காலத்தில் மேற்கண்ட மின் மோட்டார் இயக்க இயலவில்லை. எனவே மின் தடை காலத்தில் மேற்கண்ட மின் மோட்டார் இயக்கி நகருக்கு சிரான குடிநீர் வழங்கிட ஏதுவாக, ஒரு 320 KVA திறனுள்ள | 476) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ஜெனரேட்டர் புதிதாக பொருத்தி, இது தொடர்பான பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.32,00,000/—க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>மா.ந.க.எண்.இ3/14866/11 | |
| | 8. | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண் 38607/பி2/11—1 நாள் 24.08.2011ல் சட்டமன்ற பேரவை வினா எண் 34க்கு தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாநகராட்சி பகுதியில் நவீன ஒரு எரிவாயு தகன மேடை அமைப்பது தொடர்பாக பிரேரணை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் மாநகராட்சி பகுதியில் திரேஸ்புரம் (மேட்டுப்பட்டி) மையவாடியில் ஒரு எரிவாயு தகன மேடை அமைக்க ரூ.51.25 லட்சம் மதிப்பீட்டில் பிரேரணை அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதின் பிரகாரம் இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 06.09.2011ல் மன்றத் தீர்மான எண் 423 நாள் 30.08.2011 நிறைவேற்றிய மாமன்ற தீர்மானத்துடன் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் சென்னை, நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 41970/2011/எல்ஏ3 நாள் 03.11.2011ல் மானியமாக உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதியிலிருந்து ரூ.42.85 லட்சம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/13075/11 | 477) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 9. | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 38607/பி2/11—1 நாள் 24.08.2011ல் சட்டமன்ற பேரவை வினா எண் 34க்கு தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாநகராட்சி பகுதியில் நவீன ஆடு அடிக்கும் கூடம் அமைப்பது தொடர்பாக பிரேரணை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் மாநகராட்சி பகுதியில் 2 எண்ணம் நவீன ஆட்டு இறைச்சி கூடம் அமைக்க ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டில் பிரேரணை அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதின் பிரகாரம் இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 06.09.2011ல் மன்றத் தீர்மான எண் 427 நாள் 30.08.2011 நிறைவேற்றிய மாமன்ற தீர்மானத்துடன் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் சென்னை, நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 41970/2011/எல்ஏ3 நாள் 03.11.2011ல் மானியமாக உள்கட்டமைப்பு ஈடு செய்யும் நிதியிலிருந்து ரூ.34.70 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/13077/11 | 478) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 10. | இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சண்முகபுரம் மாநகராட்சி பள்ளி முதல் தளத்தில் நூலக கட்டிடம் கட்டுவதற்காக கல்வி நிதி 2011—12ல் பணி செய்ய இம்மாமன்றம் தனது தீர்மான எண் 391 நாள் 04.08.2011 அன்று திரு கே.வேலாயுதம் ஒப்பந்ததாரருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 12.08.2011 | 479) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் திரு கே.வேலாயுதம் அவர்கள் இறந்து விட்டதாலும், இதுவரை ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுக்காததாலும் மாநகராட்சி விதிகளின்படி அவர் செலுத்திய முன்வைப்பு தொகையை பிடித்தம் செய்யப்பட்டு இப்பணியினை ரத்து செய்து விட்டு புதியதாக 2011–12 ஆண்டு விலைவிகிதத்தின்படி மதிப்பீடு தயார் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>ம.ப.எண் 12/2011–12 | |
| | 11. | தூத்துக்குடி மாநகராட்சி 25.11.2011 முதல் சங்கரப்பேரி, மீளவிட்டான், அத்திமரப்பட்டி, முத்தையாபுரம் மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 பஞ்சாயத்துக்களை இணைத்து மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட மேற்கண்ட 5 பஞ்சாயத்துக்களிலும் உள்ள தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீர் விநியோக பணிகளை தகுந்த லைன்மேன் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும், குடிநீர் பணியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அவுட்சோர்சிங் முறையில் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் குழாய் விநியோக பணிகள் மற்றும் வால்வு அடைப்பு திறப்பு பணிகள் ஆகியவற்றை 15 உதவியாளர்கள் கொண்டு ஒரு வருட ஒப்பந்த முறையில் பணிகள் செய்திடவும் மேற்படி விபரங்கள் குறித்து உடனுக்குடன் மாநகராட்சி அலுவலகத்தில் தகவல் தெரிவிப்பதற்கும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.7.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br><br>மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 5 பஞ்சாயத்துக்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் செய்யப்படும் குடிநீர் குழாய் விநியோக பணிகள் மற்றும் வால்வு அடைப்பு திறப்பு பணிகள் ஆகியவற்றை 15 உதவியாளர்கள் கொண்டு ஒரு வருட ஒப்பந்த முறையில் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் ரூ.7.00 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/14270/11 | 480) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.

இடம்: தூத்துக்குடி
நாள் : 15.11.2011